**ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு-II**
**(நேர்முகத்தேர்வு பதவிகள் மற்றும் நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள்)**
**முதன்மைத்தேர்வு (விரிவான எழுத்துத் தேர்வு)**

**தாள்- I**

**தேர்வுக்கான தலைப்புகள்**

தலைப்பு 1 - தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல்

தலைப்பு 2 - ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்

**தாள் -II**

**தேர்வுக்கான தலைப்புகள்**

தலைப்பு 1 - சுருக்கி வரைதல்

தலைப்பு 2 - பொருள் உணர்திறன்

தலைப்பு 3 - சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்

தலைப்பு 4 - திருக்குறளிலிருந்து கீழ்காணும் தலைப்புக்கள் தொடர்பாக கட்டுரை எழுதுதல்

அ) மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்.

ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்

ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் முதலானவை

உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

ஊ) திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்

தலைப்பு 5 - கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது)

**தேர்வுக்கான பாடத்திட்டம்**
**தமிழ்நாட்டின் வரலாறும், மரபும், பண்பாடும்**

**[இப்பாடத்திட்டம் தாள்-I (தலைப்பு 1 மற்றும் 2) மற்றும் தாள்-II (1 முதல் 3 வரை கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு மட்டும்)]**

1.1 தமிழர் நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - செவ்வியல் காலம் முதல் இக்காலம் வரை.

1.2 தமிழ்மொழி வளர்ச்சியில் சங்க கால இலக்கியமும் வரலாற்றுச் சான்றுகளும்.

1.3 தமிழ்நாட்டின் இசை மரபு - நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நடனம், நாட்டுப்புற இசைக் கருவிகள் மற்றும் நாட்டுப்புற நாடகங்கள் - செவ்வியல் காலம் தொடங்கி பின் நவீனகாலம் வரை அதன் மாறுபாடுகள்.

1.4 நாடகக்கலை - வீதி நாடகம் - நாட்டார் அரங்கம் - மரபு வழியிலான நாடக உத்திகள்.

1.5 சமூகப் பொருளாதார வரலாறு - கடல் கடந்த வணிகம் - சங்க இலக்கியச் சான்றுகள் (பட்டினப்பாலை முதலியன)

1.6 பகுத்தறிவு இயக்கங்கள் - திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம்.

1.7 தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நலத்திட்டங்களை நடைமுறைபடுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு - இட ஒதுக்கீடும் அதன் பயன்களும் - தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு.

1.8 பெண்ணியம் - சமுதாயத்தில் பெண்ணியம், இலக்கியத்தில் பெண்ணியம் - பல்வேறு கருத்துகளும் பார்வைகளும்.

1.9 இக்காலத் தமிழ்மொழி - கணினித் தமிழ், வழக்கு மன்றத் தமிழ், நிர்வாக மொழியாகத் தமிழ், புதிய வகைமைகள்.